# செயலாற்றுகை அறிக்கை
# 2013

***பிரஜைகள் செயற்பாட்டு பொதுச்சேவை வழங்குகை புத்துருவாக்கங்களை நோக்கி...***




**அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு**
**6 வதுமாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்ல**

## பரந்த கொள்கை வழிகாட்டல்கள்...



"அரச சேவையின் சுயாதீனதன்மை, வினைத்திறன் என்பவற்றை வெறும் ஆவணங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு வரையறுப்பதற்குப் பதிலாக, நாட்டின் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் அரச துறையை மறுசீரமைக்க நான் உறுதிபூண்டுள்ளேன். எனவே, நான் ஜனாதிபதி விசேட செயலணியொன்றின் முயற்சிகளினூடாக அரச துறையை சேவை நோக்குள்ள, வெளிப்படைத் தன்மையுள்ளதும் வினைத்திறனானதுமான சேவையாக மாற்றியமைப்பேன்."

(மஹிந்த சிந்தனை எதிர்காலத்துக்கான நோக்கு பக்கம் 34-35)

**''2013 ஆம் ஆண்டினைபொதுச் சேவையில் மிகச் சிறந்த ஆண்டாக உருவாக்க, அனைத்துபொதுச் சேவையிலுள்ளவர்களை அர்ப்பணிக்கும்படி நான் வேண்டிக்கொள்கிறேன்.''**

***வரவுசெலவுத்திட்ட உரை, 2013***



## பலம்வாய்ந்த அரச சேவை..........

மஹிந்த சிந்தனை செயற்திட்டத்தை யதார்த்தமாக்கும் ஓர் அடிப்படைத் தேவையான நாட்டில் இடம்பெறும் துரித அபிவிருத்திக்கு இணைந்ததாக அரச சேவையை திசைப்படுத்தவதற்காக அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் அதன் மூன்று வருட குறுகிய காலவரலாற்றுக்குள் பல செயற்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. ஆக்க ரீதியான திட்டமிட்ட அடிப்படையில் எம்மால் செயற்படுத்தப்படும் அந்தசெயற்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதனைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அடிமட்டத்தில் அரச சேவை திட்டமிடல் மக்களை அடிப்படையாகக் கொண்ட முன்னணி அலுவலக செயற்திட்டம் பிரயோகரீதியாகப் பரீட்சிக்கப்பட்டது. அந்தசெயற்திட்டம் நுவரெலியாமற்றும் குருநாகல் மாவட்டங்களின் மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பலத்தபராட்டுக்குள்ளாகியது. அந்ததிட்டங்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் சகல மாவட்டங்களிலும் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்து விசேட கவனஞ் செலுத்த அரச சேவையை வழங்குவதில் செயற்திறமைமற்றும் பயனைமேம்படுத்தவதற்கும் உச்சமுக்கியத்துவமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்த வண்ணமுள்ளது. எனவேமுறைப்பாடுகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்கி பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதுகுறித்து விசேடமாக வகுக்கப்பட்டமற்றும் செயற்படுத்தப்படும் பொறிமுறைஒன்று இருக்கவேண்டும். இதற்காகமக்கள் முறைப்பாடுகளுக்குநிவாரணம் வழங்கும் பொறிமுறை ஒன்றைஆரம்பிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் நிவாரணங்கள் மூலம் செயற்படுத்தப்படும் சில ஒழுங்குவிதிகள் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளைவழங்கும் துரிதஅபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் போதுதடையாக இருப்பதனால் அந்தசட்டதிட்டங்கள் அனேகமானவைகாலம் கடந்தவை என அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே ஒழுங்குவிதிகளைமிக இலகுபடுத்துவதுதிருத்துவது அல்லதுஅகற்றிவிடுவதுகாலத்தின் அத்தியாவசியத் தேவையாகும். இதற்காகஅமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரப்படிமாதிரித் திட்டமாகச் செயற்படுத்தப்படும் ‘ரெட்டேப் சலெஞ்’’என்ற செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

அதே போன்று எமது அமைச்சினால் செயற்படுத்தப்படும் மற்றொரு செயற்திட்டமான முகாமைத்துவ மறுசீரமைப்பு ஒன்றியம் அமைத்தல் வேலைத்திட் டமீளாய்வுசெயற்திட்டம் அநுராதபுர மாவட்டவிவசாயசேவைப் பிரிவினைநவீனப்படுத்தும் செயற்திட்டம் ஒன்றிணைந்ததிட்டம் வகுத்தல் மூலம் மாகாணசபைகளின் முகாமைத்துவ பயிற்சி பிரிவு அலகினைபலப்படுத்தல் நுவரெலியாமாவட்ட ஒன்றிணைந்த அபிவிருத்திதிட்டத்தைத் தயாரித்தல் அரசநிர்வாகசுற்றறிக்கை 06.2006 இன் படிசேவையாப்புமற்றும் ஆட்சேர்பு ஒழுங்குவிதிகளைதிருத்தும் செயற்பாட்டினைத் துரிதப்படுத்தல் மாவட்டத்துக்குள் ஆற்றல் அபிவிருத்திஅலகினைஆரம்பித்தல் போன்றசெயற்திட்டங்களைச் சுட்டிக்காட்டலாம். இந்த செயற்திட்டங்கள் திட்டமிட்ட இலக்குகளை அடைவதற்கான ஆற்றலைப் பெற்றமை எமது அமைச்சு பெற்றவெற்றிகளாகக் கருதலாம்.

அமைச்சின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவியஎமது அமைச்சின் பணியாளர்கள் மற்றும் எம்முடன் நெருங்கிச் செயற்பட்ட அந்தந்த அரச நிறுவனங்களது பணியாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு இதனைச் சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.

**நவீன் திசாநாயக்க**

**அமைச்சர்**

**அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு**

## *அரச முகாமைத்துவ மறுசீரமைப்புக்கு புதியதொரு கற்றல் சூழலை உருவாக்குதல்*

இவ்வமைச்சின் பணிப்பாணை ஊழலைஒழித்தல் மற்றும் நவீன தொழினுட்பங்களை உபயோகித்து முகாமைத்துவக் கட்டமைப்புக்கள்,பணிச் செயன்முறைகள் மற்றும் மனிதவளங்களை அபிவிருத்தி செய்தல் என்பன மூலம் வினைத்திறன் மிக்கதும் மக்கள் நட்பானதுமான அரச சேவையொன்றை உறுதிசெய்வதை உள்ளடக்கியதாகும்.

மேற்படி குறிக்கோள்களை எட்டுவதற்கு, 2013 ஆம் வருடத்தில் 18 வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2013 டிசம்பர் 31 ஆம் தேதியன்று மேற்படிவேலைத்திட்டங்களின் செயலாற்றுகை பற்றிய விபரம் இவ்வறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் வருடத்துக்கு,பின்வரும் உந்துகைப் பகுதிகளுக்கு 76 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

- அரச சேவை முறைமைகள், செயலொழுங்குகள் எளிமையாக்கம் ரூபா 30 மில்லியன்
- அரச துறைதர முகாமைத்துவ ரூபா 30 மில்லியன்
- மென்பொருள் அபிவிருத்திரூபா 16 மில்லியன்

விஷேத்துவ அறிவின் அடிப்படையில் மனிதவளங்களை அரசதுறைக்குப் நற்பயனளிக்கக்கூடியவகையில் பகிர்ந்தளிப்பதற்கும் குறிப்பிட்டபகுதிகளில் மனிதவளங்களை அபிவிருத்திசெய்வதற்கும் தேவையானதகவல்களை வழங்குகின்றது. இதன் மூலம் இலங்கை அரசதுறையில் மனிதவள முகாமைத்துவத்திற்கான மொத்தச் செலவினை குறைக்க உதவுவதோடு ஏற்கனவே அரசதுறையில் மேம்படுத்தப்பட்டுள்ள மனிதவள முறைமையை மதிப்பீடுசெய்யவும் உதவுகின்றது.

குறிப்பாக முதல் அரையாண்டுப் பகுதியில் அமைச்சு செயலாற்றுகையில் தாக்கத்தை ஏற்படுத்திய பலசவால்களை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது. அவற்றில் அடிக்கோடிட்டுக் காட்டக்கூடியவை வருமாறு:

- ஆண்டின் இரண்டாம் காலாண்டுவரைஊழியர்குழாத்தின் 60%ஆனதரநிலைப் பதவிகள் வெற்றிடமாக இருந்தன.
- அமைச்சுக்கானமிகக்குறைந்தஅலுவலக இடம் 2013 நடுப்பகுதிவரைகிடைக்கவில்லை.
- மறுசீரமைப்புநிகழ்ச்சிநிரலொன்றைதயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் அவசியமானநிபுணர்கள் பற்றாக்குறை
- தனது நேரடிகண்காணிப்பின் கீழ் செயற்படும் அமுலாக்கல் கரமொன்று அமைச்சிடம் இருக்கவில்லை.

சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்வெற்றிடங்கள் 2013 ஜுலையிலேயே நிரப்பப்பட்டன. ஆகையால் நடப்பாண்டுக்கான செயற்திட்டங்களை வினைத்திறனாக அமுல்படுத்துதலை 2013 ஜுலை தொடக்கமே செய்யமுடிந்தது.

இவ்வருடத்தில் அமைச்சு முகங்கொடுக்கவேண்டியேற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், அரச முகாமைத்துவ மறுசீரமைப்பை முன்னே கொண்டு செல்வதற்கு பின்பற்றவேண்டிய நடைமுறைக்கேற்றதும் வினைத்திறனானதுமான அணுகுமுறைகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியையும் மீள்சீராக்கலையும் அமைச்சு இவ்வருடத்தில் எட்டியது. அமைச்சினால் வகையீடுசெய்யப்பட்ட '3Wஅரச சேவைகளை ஊடுகடத்தும் மாதிரி" எனும் சட்டகவமைப்பு குருநாகல் மாவட்டத்தில் முன்னோட்ட சோதனை செய்யப்பட்டு சாதகமான பெறுபேறுகள் எட்டப்பட்டன. முன்னணி நிறுவனங்களினால் பிரஜைகளுக்கு நேரடியாக வழங்கப்படும் சேவைகளின் தரத்தைவிருத்திசெய்யும் விசேட கவனக்குவிப்பைக் கொண்ட இப்பரிசோதனை மிகக்குறுகிய காலத்தில் மிக வெற்றிகரமானது என நிரூபிக்கப்பட்டதுடன் ஏனைய மாவட்டங்களுக்கும் அதனைப் பிரயோகிப்பதற்குத் தேவையான பாடங்களையும் உருவாக்கித் தந்தது.

**டப்ளிவ். எம். பந்துசேன**
**செயலாளர்**
**அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு.**

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அமைச்சு பற்றிய மேலோட்டம் | 01-07 |
| 1.1 | அமைச்சின் உருவாக்கம் | 01 |
| 1.2 | கடமையும் செயல்பாடுகளும | 01-02 |
| 1.3 | தேசிய நிர்வாக சீர்திருத்தக் குழு (NARC) | 02-03 |
| 1.4 | நோக்கு, குறிக்கோள், இலக்கு மற்றும் ஊக்குவித்தல் பகுதிகள் | 05 |
| 1.5 | உபாய வழிகாட்டல்கள் | 05- 06 |
| 1.6 | பொதுமுகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் கட்டமைப்பு | 06 |
| 1.7 | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | 07 |

| | | |
|---|---|---|
| 2. | அமைச்சின் செயலாற்றுகை | 08- 33 |
| 2.1 | முகாமைத்துவ மறுசீரமைப்பின் இடையீடு | 08 |
| 2.2 | பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் | 09-33 |
| 3. | பௌதீக மற்றும் நிதி மீளாய்வு - 2013 | 34-37 |
| 4. | நிதி செயல்திறன் | 38-40 |
| 4.1 | மீண்டுவரும் செலவினம் | 38 |
| 4.2 | மூலதனச் செலவினம் | 39-40 |

# 1.அமைச்சு பற்றிய மேலோட்டம்

## 1.1 அமைச்சின் உருவாக்கம்

நாட்டு மக்களுக்கு நட்பு ரீதியான அடிப்படையில், பயனளிக்கக்கூடிய, திறமையான பொதுச் சேவை ஒன்றினை வழங்கும்முகமாக பொதுநிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,30 ஏப்ரல் 2010 திகதிய வர்த்தமானி இலக்கம் 1650/20 இல் அறிவித்தல் கீழ் நிறுவப்பட்டது.

விரயங்களை அகற்றி, நவீன தொழில்நுட்பம் மற்றும் முறைபயன்பாடு மூலம் நிர்வாக முறைமை ஒன்றினை ஏற்படுத்தி, செயல்முறை மற்றும் மனித வள அபிவிருத்தி போன்றனவற்றின் ஊடாக, மக்கள் நட்பு பொது சேவை வழங்குவது என இந்த அமைச்சின் முக்கிய செயல்பாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரச நிர்வாக மறுசீரமைப்பின் தேவைமஹிந்த சிந்தனையின் 34-35ம் பக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு *“பொது சேவை சுதந்திரம் மற்றும் திறன் ஆகியவற்றை வெறும் ஆவணங்களுக்குள்ளும் செயல்முறைகளுக்குள்ளும் வரையறுத்துக்கொள்ளாமல் அரச சேவையினை, நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்பதற்காக திடசங்கற்பம் பூண்டுள்ளேன். எனவே, நான், பொது சேவையினை திறமையான, வெளிப்படையான, சேவை அடிப்படையானதாக மாற்றுவேன்”.*

## 1.2 கடமையும் செயல்பாடுகளும்

22.11.2010 தேதியிடப்பட்ட இல. 1681/3 வர்த்தமானி அறிவித்தல் இந்த அமைச்சின் கடமைகள் மற்றும் செயல்பாடுகளை கீழே கொடுக்கப்பட்டவாறு விவரிக்கிறது.

அ). அரசின் நிர்வாக பொறிமுறையினை நவீனமயப்படுத்துவதற்காகவகுக்கப்படும் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள்பின்வரும் குறிக்கோள்களை கொண்டுள்ளன:

1) அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்தல் மற்றும் மக்கள் சேவை வழங்கல் உட்பட அனைத்து அரச கருமங்களும், ஊழல், விரயங்களைத்

தவிர்த்துக்கொண்டு, பொருத்தமான இடங்களில் நவீன நிர்வாக உத்திகளையும்தொழில்நுட்பங்களை பயன்படுத்திசெயல்படுவதை உறுதி செய்தல்.

2) அபிவிருத்திநிகழ்சிகளும் திட்டங்களும் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதி செய்தல்

3) பொது சேவைகள் ஒரு திறமையான மற்றும் மக்கள் நட்பு ரீயில் வழங்கப்படுகிறது என்பதை உறுதி செய்தல்.

ஆ). கொள்கைகள் வகுக்கப்படும் போதும் திட்டங்கள் அமைக்கப்படும் போதும் திட்டங்களை அமுல் படுத்தும் போதும்,சகல நிலைகளிலும், நன்கு பயிற்றப்பட்ட, துார நோக்குடைய, அர்ப்பணத்துடன் செயலாற்றக்கூடிய ஆளணி ஒன்று அரசுக்கு எப்போதும் இருப்பதை உறுதி செய்தல்

இ). வகுக்கப்பட்ட மேற்படி கொள்கைகளையும் திட்டங்களையும் ஏனைய அமைச்சுக்களுடன் இணைந்து நேரடியாக அமுலாக்கல்

ஈ). தேசிய நிர்வாக சீர்திருத்தக் குழுவினை மேற்பார்வை செய்தல்.

## 1.3 தேசிய நிர்வாக சீர்திருத்தக் குழு (NARC)

இந்த அமைச்சின் கீழ் வரும் தேசிய நிர்வாக சீர்திருத்த குழுவானது,பொது சேவைகள் திறமையான மற்றும் பயனுள்ள விதத்தில் சென்றடைய அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரங்களை நவீனமயப்படுத்துவதற்காகவும் மற்றும் மேம்படுத்துவதற்காகவும், ஜனாதிபதி பணிப்பின் பேரில் உருவாக்கப்பட்ட,தனித்துவம் மிக்கஅமைப்பாகும்.

### தேசிய நிர்வாக சீர்திருத்த குழுவினது ஆணை பின்வரும் முக்கிய நிர்வாக சீர்திருத்தப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்:

**(i)** முழு நிர்வாக மற்றும் முகாமைத்துவ இயந்திரங்கள் இயக்கப்படும் நோக்கங்கள் பயனுள்ளதாகவும் குறைந்த செலவிலும் அடையக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல் அவசியமான சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்,பொதுத்துறையில் நிர்வாக மற்றும் முகாமைத்துவ கட்டமைப்புகளை, தொடர்ச்சியான

அடிப்படையில்,மீளாய்வு செய்தல்,

**(ii)** பொது சேவையின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, அரசினது மனிதவள முகாமைத்துவம் மற்றும் மனிதவள அபிவிருத்தி முறைமைகளை தொடர்ச்சியான மீளாய்வுக்கு உட்படுத்தல்,

**(iii)** அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை, தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்து,அவசியமான இடங்களில், நவீன, உரிய தொழிநுட்பங்களை பயன்படுத்தி,மக்கள் நட்பு அடிப்படையில் திறமையானதும் பயனளிக்கக் கூடியதுமான சேவைகளை வழங்கக்கூடியவாறு மாற்றங்கள் செய்தல்,

**(iv)** நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்ஆகியவற்றை,மேம்பாடு செய்தல் மற்றும் நவீனமயமாக்கல் போன்றவற்றுடன்சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளன எனக்கருதப்படும், அரசின் ஏனைய நிறுவன அம்சங்களையும் ஆய்வுக்கு உட்படுத்தல்

(இந்த செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணித்து, காலத்துக்குக் காலம், (அரசுக்கு அறிக்கைகளை சமர்பித்தல்.

## தேசிய நிர்வாக சீர்திருத்த குழுவினது சீர்திருத்த முயற்சிகள்

**(i)** தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முக நிலையத்தினை(ICTA)மீள்நெறிப்படுத்தும் அரசின் திட்டத்தில், கொள் வகுக்கும்தலையாய அமைப்பாக செயல்படுதல் மற்றும் பல்வேறு அ திட்டங்களை மீள்நெறிப்படுத்தி அமுல்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்க தீர்க்கும் அமைப்பாகவும் சேவையாற்றல்.

**(ii)** சகல அமைச்சுக்களிலும் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிலும் சீர்திருத்தக் குழுக்களைக் கொண்ட ஒரு வலையமைப்பை(M (MRCs)இன் முக்கிய செயல்பாடுகளாவன:அமைத்தல்.

அ. நிர்வாக சீர்திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதன் மூலம் தேசிய நிர்வாக சீர்திருத்த கவுன்ஸிலுக்கு உதவுதல்

ஆ. தேசிய நிர்வாக சீர்திருத்த கவுன்ஸில் ஊடாக அறியப்படும் நிர்வாக சீர்திருத்தம் தொடர்பான அரசின் முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்

இ. அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் நிர்வாக சீர்திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

ஈ. நிர்வாக சீர்திருத்தக் குழுக்களின் (MRCs) முன்மொழிவுகளை, தேசிய நிர்வாக சீர்திருத்த கவுன்ஸின் அறிதலுடன், செயல்படுத்தல்

உ. ஊழியர்கள் நிர்வாக சீர்திருத்தங்களுக்கு உடன்படக்கூடிய கலாசாரத்தை பொதுத்துறை நிறுவனங்களில் உருவாக்குதல்.

(iii) அமைச்சு செயலாளர்களின் ஒழுங்குமுறை பணிச்சுமையை குறைக்க உத்திகளை கையாளள்

(iv) அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கென வேலை கையேடுகள்(ுழுசம ஆயரெயடள) தயாரித்தல்.

(v) ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள் பொதுத்துறையில் சந்திக்கும் நடைமுறை இடையூறுகளைத் தவிர்த்து, முறைமையினை இலகு படுத்தல் - இதற்காக, அமைச்சரவை செயலாளர் தலைமையில் முத்தரப்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு, பொது துறை மற்றும் தனியார் துறையினரோடு இணைந்து பணியாற்றுகின்றது.

(vi) மூத்த அரசாங்க ஊழியர்களின் ஆற்றல் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை SLIDA வுடன் இணைந்து செய்தல்.

(vii) SLIDA ஒத்துழைப்புடன் மனிதவள மேம்பாட்டு வியூகம் அமைத்தல்.

## 1.4 நோக்கு, குறிக்கோள், இலக்கு மற்றும் ஊக்குவித்தல் பகுதிகள்

### நோக்கு

“பொது நிறுவனங்களில் அதி சிறந்த முகாமைத்துவம்”

### குறிக்கோள்

“மக்கள் நட்பு ரீதியான் சீர்திருத்த முயற்சிகள் மூலம் பொது முகாமைத்துவம் நவீன தொழில்நுட்பங்களையும் செயல்முறைகளையும் பயன்படுத்தி பெறுபேறுகளை நோக்காகக் கொண்டு செயல்படுவதை உறுதி செய்தல்”

1. பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட அணுகுமுறைகள் மூலம் பயனுள்ள பொது முகாமைத்துவத்தை உறுதிசெய்தல்
2. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதின் மூலம் பொது முகாமைத்துவத்தை திறமையாக்கல்
3. பொது சேவையின் செயற்திறன், அர்ப்பணம் மற்றும் துார நோக்கு ஆகியவற்றை உறுதி செய்தல்.

### உபாய வழிகாட்டல்கள்

1.5 அமைச்சு இந்த இலக்கினை அடைவதற்காக மூன்று திணிப்பு பகுதிகளை வகுத்துள்ளது.

1. அரச சேவையின் முறைமைகள் மற்றும் செயற்பாடுகளை இலகுபடுத்தல்.
(அரச துறை மேம்பாடு)
2. பொது முகாமைத்துவத்துக்கான மென்பொருள் அபிவிருத்தி

## 1.5 உபாய வழி

அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு கடந்த மூன்று வருடங்களாக அதன் உபாய வழியினை வகுத்து வருகின்றது. மத்தியில் மேற்கொள்ளப்படும் நிர்வாகச் சீர்திருத்தங்களை கீழ்மட்டத்தின் பொதுச்சேவை வழங்கலுக்கு மாற்றுதல். அதன் மூலம் அரசுக்கும் மக்களுக்கிடையிலான தொடர்பு துரிதப்படுத்துவதோடு இது

பொதுச்சேவைகளைப் பெறுவோரது வசதிகளை இலகுவாக்குவதில் முக்கியமாக இருக்கும்.

2011 ஆம் ஆண்டு அரச சேவை ஊழியர்களது சேவை நிலையை மேம்படுத்தவது வலியுறுத்தப்பட்டதோடு 2012 இல் நிறுவன ரீதியான மாற்றத்தில் முக்கிய அவதானம் செலுத்தப்பட்டது. 2013 மக்களுக்கு முன்னணி அமைப்புக்களால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை அதிகரிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.




## 1.6 பொது முகாமைத்துவ அமைச்சின் சீர்திருத்தக் கட்டமைப்பு



## 1.7 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் - பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு

| செயலாளர் | | | | | |
|---|---|---|---|---|---|
| மேலதிகச் செயலாளர் | | | | | |
| நிலை | பிரிவுகள் | | | | |
| | நிர்வாகப் பரிவு | நிதிப் பிரிவு | திட்டமிடல் பிரிவு | செயற்திட்டப் பிரிவு | உள்ளக கணக்காய்வுப் பிரிவு |
| பிரிவுத் தலைவர் | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | பிரதம கணக்காளர் | பணிப்பாளர் திட்டமிடல் | பணிப்பாளர் செயற்திட்டம் | கணக்காளர் |
| ஏனைய நிர்வாக ஊழியர்கள் | உதவிச் செயலாளர் | - | பிரதிப் பணிப்பாளர் திட்டமிடல் | உதவிச் செயலாளர் உதவிப் பணிப்பாளர் தகவல் தொழில் நுட்பம் | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 53 | | | | |
| அபிவிருத்தி உதவியாளர்கள் | 3 | | | | |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 14 | | | | |
| ஆதரவு ஊழியர்கள் | 23 | | | | |

# 2. அமைச்சின் செயற்பாடுகள்

## 2.1 முகாமைத்துவ சிபாரிசு தலையீடுகள்

பொதுமுகாமைத்துவ அமைச்சின் சீர்திருத்தங்கள் - செயற்பாட்டு அறிக்கை 2013

2013 ஆம் ஆண்டில் அமுல் நடத்தப்பட்ட முகாமைத்துவ சீர்திருத்த தலையீடுகள் கொள்கை, உபாய மற்றும் செயற்பாட்டு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. செயற்பாட்டு ரீதியான விநியோக பொறிமுறை மாற்றத்தினை பிரதானமாக வலியுறுத்தும் அதேவேளை செயற்பாட்டு மட்டத்திலான மாற்று இலக்குகளுக்கான சீர்திருத்த பொறி உபாய மற்றும் கொள்கையடிப்படையிலான மாற்றத்திற்கூடாக வகுக்கப்பட்டது.



## 2.2 பிரதான நிகழ்ச்சிகள்

பின்வரும் செயல்திட்டங்கள் இவ்வாண்டில் ஒவ்வொரு ஊடுருவிச் செல்லும் பகுதிகளிலும் அமுல்படுத்தப்பட்டது. ஊடுருவிச் செல்லும் பகுதி

### .திணிப்பு இல 01- முறையை சாதாரணப்படுத்தல் மற்றும் பொதுச் சேவையில் செயன்முறை.

- தெரிவு செய்யப்பட்ட 20 நிறுவனங்களின் கடமைகளையும் சேவைச் செயன்முறையையும் மீளாய்வு செய்தல்.
- பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் அலுவலக முறையைப் பலப்படுத்தலும் அமைச்சுக்குள் தீர்வினை அமுல்படுத்தல்.

### திணிப்பு பகுதி 02 -பொதுத்துறை தரமுகாமைத்துவ அபிவிருத்தி

- அனுராதபுர மாவட்டத்தில் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தல்.
- மாகாண சபைகளில் ஒன்றிணைந்த திட்டத்தைத் தயாரித்து எம்டிரியு வினைப் பலப்படுத்தல்.
- அநாவசியமான தாமதச் சவால்
- நுவரேலிய மாவட்ட ஒருங்னைப்பு திட்டத்தை தயாரித்தல்.
- முகாமைத்துவ சீர்த்திருத்தம் மூலம் பொது நிறுவனங்களது செயற்பாட்டை மேம்படுத்த நான்கு வருட கட்டமைப்பு
- மாதிரி மாவட்ட அபிவிருத்தி – குருநாகல் மாவட்ட

55 முகாமைத்துவ சீர்திருத்த அலகின் கொள்ளளவினை அதிகரித்தல்

06/2006 சுற்று நிருபப்படி சேவைக்குறிப்பு மற்றும் ஆளணி சேர்ப்பிலுள்ள செயன் முறைகளைப் புதுப்பித்தல்.

### திணிப்பு 03 - மென்பொருள் மேம்படுத்தலும் பொது முகாமைத்துவமும

- குறைபாடுகளை நீக்கும் பொறிமுறை
- தேசிய மட்டத்தில் மனித வள முகாமைத்துவ முறை
- மாவட்டங்களில் ஆற்றல் அபிவிருத்தி அலகுகளை ஸ்தாபித்தல்
- பொதுத்துறை தர முகாமைத்துவத்துக்கான உபகரணங்கள் மற்றும் உபகரணத் தொகுதி (தொடர்பாடல் சாதனங்கள்) மாதிரியைத் தயாரித்தல்.
- நுவரெலிய மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பிரிவு மற்றும் பிரதேச செயலகத்துக்கான கணினி மென்பொருள்

## மாதிரி மாவட்ட அபிவிருத்தி

### திட்டத்தின் விவரம்

தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பொது சேவை வழங்கலை மேம்படுத்த“பகுதிகளில் முழுமையாக” பொது சேவை மாதிரி பகுதிகளின் அபிவிருத்தி, இந்த பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு முக்கிய திட்டமாக இருந்தது. இது 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு மற்றும் ஒரு முன்னோடி திட்டமாக கொத்மலை பிரதேச செயலகத்தில் செயற்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் வெற்றிகரமான முடிவுகளை அடைந்ததை அடுத்து,பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு இந்த திட்டத்தை 2013 ஆண்டுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்தது. மற்றும் பின்வரும் மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டன.

### குறிக்கோள்

துறைகளில் உள்ள ஒரு தொடர்ச்சியான புவிசார் நிர்வாக பகுதியில், துறைகளின் மத்தியில் அனைத்து செங்குத்து மற்றும் கிடைமட்ட சேவை வழங்கும் செயல்முறைகள் மூலம் அடையும்:

### முதன்மை சீர்திருத்தங்கள்

- முன்னணி காரியாலயம் மற்றும் பின் அலுவலக மறுசீரமைப்பு (சேவை நாடுவோருக்கு ஒற்றை புள்ளி தொடர்பு)
- சேவை அடையாளப் படுத்தல் (சுய, விரைவான, 1 மணி, மற்றும் ஒரு நாள்,) “செயல்முறை விளக்கம்” அடிப்படையில் ”சேவைத் தரம்” செயல் தேர்வுமுறை அடிப்படையில் உயர் சேவை.
- சேவை நாடுவோருக்கு தொடர்ச்சியான பின்னூட்டம் வழங்குதல்

### இரண்டாம் மறுசீரமைப்பு

- செயல்முறைகள் அக நிறுவன வலையமைப்பு
- செயல்முறைகள் செங்குத்து ஒருங்கிணைப்பு

### மேம்பட்ட மறுசீரமைப்பு

குறுக்குநிறுவன செயல்முறைகள் வலைப்பின்னல்(Cross organizational networking of processes)

குறுக்கு நிறுவன முடிவெடுத்தலை கணணிமயப்படுத்தல்(Digitizing cross organizational decision making)

## நுவரெலியா மாவட்டம்

### பிரதான பிரிவுகளின் விபரம்

தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பொது சேவை வழங்கலை மேம்படுத்த"பகுதிகளில் முழுமையாக" பொது சேவை மாதிரி பகுதிகளின் அபிவிருத்தி, இந்த பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு முக்கிய திட்டமாக இருந்தது. இது 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு மற்றும் ஒரு முன்னோடி திட்டமாக கொத்மலை பிரதேச செயலகத்தில் செயற்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் வெற்றிகரமான முடிவுகளை அடைந்ததை அடுத்து,பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு இந்த திட்டத்தை 2013 ஆண்டுக்கும் விரிவுபடுத்த முடிவு செய்தது. மற்றும் பின்வரும் மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டன.

- ஒரு முழுமையான பிரிவு (ஒரு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் செயல்படும் அனைத்து முக்கிய நிறுவனங்கள் உட்பட) மற்றும்

- ஒரு முழுமையான மாவட்டம் (ஒரு மாவட்டத்தில் செயல்படும் அனைத்து முக்கிய நிறுவனங்கள் உட்பட)

### சாதனைகள்

மாதிரி ‘A’ யின் கீழ் அனைத்து முக்கிய நிறுவனங்களும் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டன:

1. கொத்மலை பொலீஸ் நிலையம்

2. தெரிவு செய்யப்பட்ட 4 கமநல சேவை மையங்கள்

3. கொத்மலை ஆயுர்வேத மருத்துவமனை

4. கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் (சுகாதார வைத்திய அதிகாரி)
5. தெரிவு செய்யப்பட்ட 10 கிராம சேவகர் அலுவலகம்

மாதிரி 'B' யின் கீழ் நுவரெலியா மற்றும் கொத்மலை பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டன.

### சாதனை

18 திட்ட நிறுவனங்களில், முன் வரிசை சேவை வழங்கல் அலுவலகம் (முன் அலுவலகம்) நிறுவப்பட்டது. அத்திட்டத்தின் மூலம் மேலே குறிப்பிட்ட இலக்குகளை அடைய முடிந்தது.

உத்தேச திட்டத்தின் அடைப்படையில், வேலை செயல்முறை, வேலைக்கான இடம் மற்றும் தொழில் சக்தியினை மேம்படுத்தவும் வலியுறுத்தப்பட்டது. திட்டங்கள் செயல் படுத்தப்பட்ட பின் சேவை வழங்கலின் திறனும் செயற்பாடும் அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## குருணாகல் மாவட்டம்

### பிரதான பிரிவுகளின் விபரம்

நாட்டின் பொது சேவை சூழலை மாற்றி அமைத்து பொது சேவையை பயன்படுத்துவோர் சிரமமின்றி எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தொடர்பு கொண்டு விருப்பமான இடத்தில் விருப்பமான நேரத்தில் தேவைப்படும் சேவைகளை ஒரு புன்னகையுடன் பெற்றுக் கொள்வதற்கு, நிலையான செயற் திறன்மிக்க அலுவலகங்களையும் மாவட்ட கொத்தணி அலுவலகங்களையும் உருவாக்குதல். இதன்படி, 2014 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக குருணாகல் மாவட்டத்தில் ஆறு பிரிவுகளில் ஐந்து துறைகளின் கீழ் உள்ள 54 பொது நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட நிறுவனங்களில் செயற்படுத்தவென மூன்று அடிப்படை முகாமைத்துவ கொள்கைகள் இருந்தன.

- சிறந்த சேவைகள் அளிக்கும் நோக்கத்துடன் சேவை முத்திரையிடல்
- முன் காரியாலயம் மற்றும் பின் காரியாலயம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்
- சேவை பெறுவோருக்கு பின்னூட்டம் வழங்குதல்

### சாதனை

குருணாகல் மாவட்டத்தில் 06 கொத்தணிகளுடன் 12 பிரதேச செயலகங்கள், 07 வலய மற்றும் மாகாண கல்வி அலுவலகங்கள், 08 மருத்துவமனை / சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், 11 கமநல அபிவிருத்தி மையங்கள், 21 நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள், மொத்தமாக 62 முதன்மை சீர்திருத்தங்கள் நிறைவு செய்யப்பட்டன.







மாதிரி மாவட்ட மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், குருணாகல் மாவட்டத்தில் நடைமுறைப்பட்ட முன்பகுதி காரியாலயம் மற்றும் பின்பக்க காரியாலயம்






# பொதுமக்கள் குறைதீர்ப்பு பொறிமுறை

## செயற்திட்ட விபரம்

"மஹிந்த சிந்தனை - எதிர்காலத்துக்கான நோக்கு" குறிப்பிடுகிறது: அரச சேவையானது பொது மக்களின் விருப்பத்துக்கேற்ப தொழிற்படுதல் வேண்டும்.

பொதுமக்களின் குறைகளைக் கேட்பதில் விசேட கவனத்தை செலுத்துவதன் மூலம், அரச சேவை வழங்குகை மற்றும் அரச சேவையின் தரத்தின் தொடர்ச்சியான மேம்பாட்டின் வினைத்திறனையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் அதிக பட்ச முன்னுரிமையை அளிக்கிறது. பொதுமக்கள் குறைதீர்ப்பு கேள்விகளை பற்றி பதிலளிப்பதற்கு, விசேடமாக வடிவமைக்கப்பட்ட பொதுமக்கள் குறைதீர்ப்பு பொறிமுறையும் அதன் அமுலாக்கமும் இருத்தல் வேண்டும்.

### முன்னோட்ட கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்

- வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம்
- கமநல அபிவிருத்தித் திணைக்களம்
- நீர்ப்பாசனத் திணைக்களம்
- வனபரிபாலன திணைக்களம்
- தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
- சுகாதார அமைச்சு
- கல்வி அமைச்சு
- சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சு

## குறிக்கோள்கள்

- பாதிக்கப்பட்ட பிரஜைகள் உட்பட பங்குதாரர்களுக்கிடையில் ஆக்கபூர்வமான உறவுகளைக் கட்டியெழுப்புதல்
- தம்மை மோசமாக பாதித்துள்ள தீர்மானங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த, பொது மக்களுக்கு அணுகும் வழிகளை வழங்குதல்
- இனக்குழுக்கள் தொடர்பாக அரச நிறுவனங்களின் தீர்மானங்கள் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதை இழிவளவாக்குதல்
- மிகப்பொருத்தமான சரியான அல்லது தடுக்கும் தீர்மானங்கள் எடுப்பதை உறுதி செய்தல்
- மோசமான அரச சேவை வழங்குககை செயன்முறை காரணமாக ஏற்படும் அமைதியின்மையை தீர்த்தல்

## சாதனை

- ICT அடிப்படையிலான குறைகேட்டல் மற்றும் தீர்த்தல் முறைமை ஊடாக MPMR, ICTA, GIC (1919) மற்றும் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் இடையில் கூட்டாண்மை ஏற்படுத்தப்பட்டு அந்தந்த நிறுவனங்கள் குறைதீர்ப்புக்கென விளக்கமான உள்ளக பொறிமுறையை உருவாக்கின.

## சுற்று நிருபம் 06/2006 சேவைக் குறிப்பு 1 இன் படி சேவைக்குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு முறைமை தொடர்பான சேவைக் குறிப்பினைத் திருத்துவதனைத் துரிதப்படுத்தல்.

### செயற்திட்ட விபரம்

பொது நிர்வாக சுற்று நிருபம் 06/2006 இன்படி பொது முகாமைத்தவ சீர்திருத்த அமைச்சு சேவைக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு முறையில் மாற்றங்களை மேற்கொள்வதனை துரிதப்படுத்த உதவுதல்.

### நோக்கம்

பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன்படி சகல சேவை வகைகளிலும் நிலவும் வேறுபாடுகளை நீக்கி வகுப்பதற்கதாக சேவைக் குறிப்பு மற்றும் ஆளணி சேர்த்தல் முறைமையினைத் திருத்துதல்.

### சாதனைகள்

| | மொத்தம் | அங்கீகரிக்கப்பட்டது | முன்னேறத்தக்கது |
|---|---|---|---|
| எஸ்எம்எஸ் | 36 | 20 | 15 |
| எஸ்ஓஆர்எஸ் | 683 | 469 | 214 |

முகாமைத்துவ சீர்த்திருத்தத்தினூடாக பொது நிறுவனங்களின் செயற்பாட்டு மேம்பாட்டுக்கு நாலாண்டு கட்டமைப்பு

## தெரிவு செய்யப்பட்ட 20 நிறுவனங்களின் பணி மற்றும் வேலை செயன்முறையை மீளாய்வு செய்தல்

### செயற்திட்ட விபரம்

மாண்புமிக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பில் அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சினால் 2011 மாதிரித் திட்டமாக கடமைகள் மற்றும் செயற்பாடுகள் மிளாய்வுப் பணி தேசிய நிர்வாகச் சீர்த்திருத்த பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டது. 10 அமைச்சுக்கள் உட்பட்ட 20 நிறுவனங்களில் இதனை அமுல்நடத்துவதற்கு 17.08.2011 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

1. அரச மொழிகள் திணைக்களம்
2. தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்
3. வன பாதுகாப்புத் திணைக்களம்
4. கல்வி அமைச்சு
5. அரச பகுப்பாய்வுத் திணைக்களம்
6. நீதி அமைச்சு
7. சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சகல அமைச்சு
8. வீதி அதிகார அபிவிருத்தி சபை
9. கட்டடத் திணைக்களம்
10. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
11. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சு
12. கந்தானை பிரதேச சபை தேசிய மொழி வள சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு
13. தேசிய மொழிகள் மற்றும் சமூக இணக்கப்பாட்டு அமைச்சு
14. தேசிய வீடமைப்பு அதிகார சபை
15. கொழும்பு மாவட்ட செயலகம்
16. ஒருங்கிணைப்பு சேவைப் பிரிவு
17. கந்தளாய் பிரதேச செயலகம்
18. இளைஞர் விவகார ஆற்றல் அபிவிருத்தி அமைச்சு
19. சிறைச்சாலைத் திணைக்களம்
20. வட மேல் மாகாண சபை

### நோக்கங்கள்

பின்வரும் நோக்கங்களுக்காக மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைகளின்படி மேற்கொள்ளப்படுவதா என்பதனை ஆராய்தல்.

- தேசிய மட்டத்திலும் உப தேசிய மட்டத்திலும் கடமைகள் தேசிய மட்டத்திலும் உப தேசிய மட்டத்திலும் ஒன்றன் மேல் படிந்திருக்கும் சந்தர்ப்பங்கள் உண்டா என்பதனைத் தேடிப் பார்த்தலும் அவ்வாறான நிகழ்வுகளை எவ்வாறு இல்லாமல் செய்யலாம் அல்லது குறைத்தலும்
- பிரஜைகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காக பொது வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தல்.
- சேவைகளை வழங்குவோரது கொள்ளளவு மேம்பாடு மற்றும் முன்னுரிமைகளை மீன் வகுத்தல் பற்றிக் கண்டறிதல்
- வேலை செயன்முறையை மேம்படுத்துவதனூடாக சக்தி வாய்ந்த மற்றும் திறமையான சேவையை அடைவதற்கு உதவுதல்.

### சாதனை

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி வெளி வளவாளர்களது ஒத்துழைப்புடன் விரிவான ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. நிறுவனங்களின் பிரதான கடமைகள் ஆய்வின் போது அடையாளப் படுத்தப்பட்டன. கடமை கட்டமைப்பு செயற்பாட்டு இடைவெளிகள் செயற்பாடுகளைப் பலப்படுத்தல் மற்றும் கொள்ளளவினைக் கட்டி எழுப்புதல் போன்றவை பற்றி சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன.

அமைச்சரவைத் தீர்மானத்தின்படி சிபாரிசுகளை அமுல் நடத்துவது 28.06.2013 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு நிறுவனங்களும் தயாரித்துள்ள வேலைத்திட்டப்படி தொடர்பான நிறுவனங்கள் அவற்றின் சேவைகளை மேம்படுத்துவதற்காக சிபாரிசுகளை அமுல் நடத்தத் தொடங்கியுள்ளன.

**அரச மொழிகள் திணைக்களம்**

மொழி பெயர்ப்பு வேலைகளைப் பூரணப்படுத்துவதற்கான நடைமுறை ஒன்று உருவாக்கப்பட்டது. அருஞ் சொல் அகாராதிகள் தயாரிக்கப்பட்டு இணக்கம் காணப்பட்ட காலத்துக்குள் உறுதிப்படுத்தும் வேலைகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

**தொழில் நுட்ப கல்வித் திணைக்களமும் பயிற்சியும்**

வழங்கப்பட்ட சிபாரிசுகளின் படி பாடவிதான பயிற்சி மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பாக கட்டளை மற்றும் தர உறுதி என்பன பலப்படுத்தப்பட்டுள்ளன. ஐசிரி ஆற்றலை மேம்படுத்தல்

**வன திணைக்களம்**

20 வன ஒதுக்குகள் அவற்றின் பாதுகாப்பு பெறுமானத்தை பாதகாப்பதற்காக முகாமைத்துவ உபாயங்களை வகுப்பதற்காக முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு

கல்வித் தரப் பிரிவினை மறுசீரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அரச பகுப்பாய்வுத் திணைக்களம்**

வழக்குகளை கையாளும் செயன்முறை மீள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**நீதி அமைச்சு**

நீதி அமைச்சுக்கான விரிவான இணைந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தேங்கிக் கிடப்பவைகளைக் குறைப்பதற்காக பல வருட உபாயத் திட்டம் ஒன்று துறைசார்ந்ததாக வகுப்பதற்காக பங்காளிகள் மற்றும் உதவி வழங்குவோரது கூட்டிணைப்புடன் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**

திண்மக் கழிவு முகாமைத்துவ கொள்கையை மேம்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கடமைகள் மீள் வகுக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**கட்டடத் திணைக்களம்**

ஆலோசனை, நிர்மாணம் மற்றும் பாராமரிக்கல் செயற்திட்ட முகாமைத்துவம் தொழில் நுட்ப பரிசோதனை என்பன ஐ.எஸ்.ஓ தரத்தினை அடையுமளவுக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

பாடப் புத்தகங்களை அச்சிடும் வேலை செயன்முறையில் வீண் விரயத்தை தடுத்தல்

**கந்தனை பிரதேச சபை**

உள்ளுர் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டன. நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத்துவ நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டன.

**வட மேல் மாகாண சபை**

வட மேல் மாகாண சபையின் 19 நிறுவனங்கள் வடிவமைப்பை இலகுபடுத்தல். புதிய வடிவமைப்பினை அறிமுகப்படுத்தல் ஐ.சி.ரி ஆற்றல் மற்றும் பண்பாட்டினைப் பயன்படுத்தல் புதிய முன்னேற்ற மீளாய்வு செயன் முறையை அறிமுகப்படுத்தல்

## கால தாமதச் சவால்

### செயற்திட்ட விளக்கம்

எதிர்காலத்துக்கான மகிந்த சிந்தனை தரிசனத்தின்படி சகல துறைகளிலும் துரித கட்ட அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறான போதும் பொது நிறுவனங்களால் பின்பற்றப்படும் சில ஒழுங்குவிதி கருவிகளினால் ஏற்படும் தாமதத்தை தவிர்த்து இரட்டிப்பு இடைவெளி, சிக்கல்கள் மற்றும் நடைமுறையில்லாமை காரணமாக அத்தியாவசிய பொதுச் சேவையை துரித அபிவிருத்தியையும் வழங்குவதற்குத் தடையாக இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயம் காரணமாக தாமத சவால்களை எதிர்கொள்வதற்காக மாதிரித் திட்டமாக பின்வருவனவற்றை அமுல் நடத்த அமைச்சரவை 19.09.2013 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியது.

- தடையாகவுள்ள காலம் கடந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை அடையாளங் காணுதல்.
- அடையாளங் காணப்பட்ட இலத்திரனியல் அச்சு ஊடகங்களினூடாக வளம்பரப்பப்படுதல்.
- கிடைத்த பொடியிலிருந்து பொது மக்களக்குத் திறமையான சேவைகளை வழங்குவதற்கு தடையாகவுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளை அடையாளங் காணுதல்.
- பொது முகாமைத்துவ அமைச்சினால் தொடர்பான அமைச்சுக்களுடன் இணைந்து இலகுபடுத்துவதற்காக சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளை திருத்துவது மற்றும் நீக்கிவிடுவது.
- தொட்பான துறைகளான சார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய கமிட்டி ஒன்றை அமைத்து சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளை இலகுபடுத்தவதற்காக நீக்கிவிடுதல் மற்றும் திருத்துவதற்கான சிபாரிசுகளைப் பெறுதல்.
- கமிட்டி மேற்கொள்ளும் சிபாரிசுகளை அமுல்படுத்தவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின் மேன்மைமிகு ஜனாதிபதியின் ஆதரவுடன் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் வருமாறு –

  1. காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு
  2. உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு
  3. காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்
